# ஆகஸ்ட் - 27- பொதுக்கால 21ம் வார ஞாயிறு

**“யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன்.**
**ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை:” மத். 16:16**

## முதல் வாசகம் : ஏசாயா 22 : 19 - 23

உன்னை உன் பதவியிலிருந்து இறக்கிவிடுவேன் உன் நிலையிலிருந்து கவிழ்த்து விடுவேன்.அந்நாளில் இல்க்கியாவின் மகனும் என் ஊழியனுமாகிய எலியாக்கிமை நான் அழைத்து,உன் அங்கியை அவனுக்கு உடுத்தி, உன் கச்சையை அவன் இடுப்பில் கட்டி, உன் அதிகாரத்தை அவன் கையில் ஒப்படைப்பேன். எருசலேமில் குடியிருப்போருக்கும் யூதா குடும்பத்தாருக்கும் அவன் தந்தையாவான்.அந்நாளில் தாவீது குடும்பத்தாரின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன். அவன் திறப்பான் எவனும் பூட்டமாட்டான். அவன் பூட்டுவான் எவனும் திறக்கமாட்டான். உறுதியான இடத்தில் அவனை முளைபோல அடித்து வைப்பேன் அவன் தன் தந்தையின் குடும்பத்தாருக்கு மேன்மையுள்ள அரியணையாக இருப்பான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என்றும் உள்ளது உமது பேரன்பு

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 11: 33 – 36

சகோதர சகோதரிகளே! கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது! அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை!”ஏனெனில் ஆண்டவரின் மனத்தை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரையாளராய் இருப்பவர் யார்?தமக்குக் கைம்மாறாக ஏதாவது கிடைக்கும் என முன்னதாகவே அவரிடம் கொடுத்து வைத்தவர் யார்?”அனைத்தும் அவரிடமிருந்தே வந்தன் அவராலேயே உண்டாயின் அவருக்காவே இருக்கின்றன, அவருக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி : மத்தேயு 16 : 13 – 20

அக்காலத்தில் இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ”மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்று கேட்டார்.அதற்கு அவர்கள், ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்” என்றார்கள்.”ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, ”யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன்.ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்.எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு் இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா.விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” என்றார்.பின்னர், தாம் மெசியா என்பதை எவரிடமும் சொல்லவேண்டாம் என்று இயேசு சீடரிடம் கண்டிப்பாய்க் கூறினார்.

**தியானம் :** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எப்பொழுதெல்லாம் தலைவர்கள் கடவுளின் வழியில் நின்று தவறிச் சென்றார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்கள். இறைவாக்கினர் எசாயா வழியாக கடவுள், அரண்மனைப் பொறுப்பாளனும் அதிகாரியுமாகிய செபுனாவக்குக் கொடுத்த எச்சரிக்கை “உன்னை உன் பதவியிலிருந்து இறக்கிவிடுவேன்: உன் நிலையிலிருந்து கவிழ்த்து விடுவேன்.” என்ற செய்தியையே நாம் முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம். கடவுளை அறிந்திராத எந்தத் தலைமைத்துவமும் நிலைபெறாது. கடவுளோடு இணைந்திராத எந்த அரசும் சிதறிப்போகும். இதை அறிந்திராத மனிதர் பலருக்கு “படுத்தாலும் எழுந்தாலும் கண்முன்னமே அவர்க்குப் பதவி பதவி என்னும் ஒரு எண்ணமே” கடவுளின் அருட்செல்வமும், அவரது ஞானமும் நிறைவாகப் பெற்றவர்களன்றி வேறு எவரும் தலைமைத்துவம் நாடுவது தாம் வழி நடாத்த முற்படும் மந்தையைச் சிதறடிப்பர். தாமும் சிதறிப்போவார் என்பதை நன்குணர இன்றைய இறைவார்த்தைகள் நம்மை அழைத்து நிற்கின்றன. அரசியலில் பதவிக்கு அடிதடிப் படுவது சாதாரண நிகழ்வுதான். ஏனெனில், அது நாடுவது கடவுளையோ அல்லது அவரது ஆட்சியையோ அல்ல. மாறாக, இவ்வலகத் தலைவன் என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்டு தன்னைப் பின்பற்ற அழைக்கும் சாத்தானின் வழிசெல்பவர்கள் அவர்கள். ஆண்டவர் வழியில் இறையாட்சி அமைக்கப் புறப்பட்ட நாம் அரசியல் வாதிகளின் அடிவருடிகளாக மாறி நிற்பது அருவருப்பானதும், அகற்றப்பட வேண்டிய ஒன்றுமாகும்.